winmeen.com

# முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

## நவம்பர் 2022

நவம்பர் 01-07

**1. தேசிய பாதுகாப்பு வியூகத்தை கொண்டுவருவதற்கு முனைந்துள்ள நாடு எது?**

அ. சீனா

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ரஷ்யா

ஈ. இந்தியா



✓ அண்மையில் அமெரிக்கா தனது தேசிய பாதுகாப்பு வியூகத்தை (National Security Strategy) அறிமுகப்படுத்தியது. அனைத்து அமெரிக்க அதிபர்களும் தங்களுடைய NSSஐ வெளிக்கொணர்வதற்கு, 'கோல்ட்வாட்டர்–நிக்கோல்ஸ் டிபார்ட்மெண்ட் ஆஃப் டிஃபென்ஸ் ரீஆர்கனைசேஷன் ஆக்ட் ஆஃப் 1986'ஆல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். தேசிய பாதுகாப்பு குறித்த நிர்வாகியின் பார்வையை சட்டமன்றத்திற்குத் தெரிவிப்பதை இந்த வியூகம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜோ பைடனின் நிர்வாகமானது தேசிய பாதுகாப்பு வியூகம், அணு நிலை ஆய்வு மற்றும் ஏவுகணை பாதுகாப்பு ஆய்வு ஆகியவற்றையும் வெளியிட்டது.

**2. மச்சு ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள மோர்பி பாலம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. குஜராத் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்



✓ மோர்பியில் உள்ள மச்சு ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள 135 ஆண்டுகள் பழைமையான தொங்கு பாலம் அறுந்து விழுந்ததில் நாற்பது பெண்கள் மற்றும் முப்பத்து நான்கு குழந்தைகள் உட்பட நூற்று நாற்பது பேர் உயிரிழந்தனர். மச்சு ஆற்றின்மீது 754 அடி நீளத்தில் அமைந்துள்ள இப்பாலம் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது கட்டப்பட்டது. பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப்பணிகளுக்காக ஏழு மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்ட நான்கு நாட்களுக்குள்ளாக அது அறுந்து விழுந்துள்ளது. இது ஜுல்டோ புல் (அலைவுறு பாலம்) எனப்படும் பிரபலமான சுற்றுலாத்தலமாகும்.

**3. 'DRDO தொழிற்துறை பல்கலைக்கழகம் – சிறப்பு மையம் (DIA–CoE)' அமைக்கப்பட்டுள்ள நிறுவனம் எது?**

அ. ஐஐடி மெட்ராஸ்

**ஆ. ஐஐடி ரூர்க்கி ☑**

இ. IISc பெங்களூரு

ஈ. NIT கோழிக்கோடு

✓ இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகமானது இந்திய தொழில்நுட்ப நிறுவனமான ரூர்க்கியில் (IIT ரூர்க்கி) 'DRDO தொழிற்துறை பல்கலைக்கழகம் – சிறப்பு மையம் (DIA–CoE)' அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மையம் இந்திய அரசாங்கத்தின் DRDOஇடமிருந்து இதற்காக நிதியுதவி பெறும். பாதுகாப்பு பயன்பாடுகளுக்கான திறன்மிகு உட்கட்டமைப்பு மற்றும் கடினப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள், ஆற்றல் சேமிப்பு சாதனங்கள், நிலச்சரிவு, பனி மற்றும் பனிச்சரிவு ஆய்வுகள், லேசர் மற்றும் ஸ்பெஷாலிட்டி ஃபைபர் போன்ற முதன்மை ஆராய்ச்சிப் பகுதிகளில் இது தனது கவனத்தைச் செலுத்தும்.

**4. 2022 – 'ஊழல் விழிப்புணர்வு வாரத்திற்கான'க் கருப்பொருள் யாது?**

**அ. Corruption free India for a developed Nation ☑**

ஆ. Elimination of Corruption

இ. Embodiment of Honesty

ஈ. Ethics and Values

✓ காலஞ்சென்ற சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் (அக்டோபர் 31) வரும் வாரத்தில் நடுவண் விழிப்புணர்வு ஆணையம் (CVC) ஊழல் விழிப்புணர்வு வாரத்தைக் கடைப்பிடிக்கிறது. நடப்பு 2022ஆம் ஆண்டில் அக்.31ஆம் தேதி முதல் நவ.6ஆம் தேதி வரை, "Corruption free India for a developed Nation" என்ற கருப்பொருளின்கீழ் இந்த ஊழல் விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. முன்னதாக, CVC 3 மாதம் நீளும் இயக்கத்தை முன்னெடுத்தது.

**5. ரிசர்வ் வங்கி சட்டத்தின்படி, பணவீக்க இலக்கை எத்தனை காலாண்டுகளுக்குப் பராமரிக்கத்தவறினால், இந்திய ரிசர்வ் வங்கி நடுவணரசுக்கு அறிக்கை அனுப்பவேண்டும்?**

அ. இரண்டு

**ஆ. மூன்று ☑**



இ. நான்கு

ஈ. ஐந்து

✓ இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 45ZN பிரிவின்கீழ், அவ்வங்கியானது, தொடர்ந்து மூன்று காலாண்டுகளுக்கு பணவீக்க இலக்கைப் பராமரிக்கத் தவறினால், அது எடுக்கும் காரணங்கள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை விளக்கி அறிக்கையொன்றை நடுவணரசாங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். 2016இல் பணவியல் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்திய பின்னர் முதன்முறையாக, RBI, வங்கி பணவியல் கொள்கைக் குழுவின் சிறப்புக்கூட்டத்திற்கு அழைப்புவிடுத்துள்ளது. 2022 ஜனவரி மாதம் முதல் தொடர்ச்சியாக மூன்று காலாண்டுகளுக்கு சில்லறை பணவீக்க விகிதம் ஆறு சதவீத இலக்கைவிட அதிகமாக இருப்பதால், அது அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

**6. ₹350 கோடியில் மருத்துவ சாதன பூங்கா கட்டப்படவுள்ள நலகர் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. கேரளா



ஆ. கர்நாடகா

**இ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ இமாச்சல பிரதேச மாநிலம் நலகரில் மருத்துவ சாதன பூங்கா கட்டுவதற்கான அடிக்கல்லை பிரதமர் நரேந்திர மோதி நாட்டினார். சுமார் ₹350 கோடி மதிப்பீட்டில் இந்தப் பூங்கா கட்டப்படவுள்ளது. மொத்த மருந்து பூங்காவிற்கு தெரிவான 3 மாநிலங்களுள் ஹிமாச்சல பிரதேச மாநிலமும் ஒன்று. மருத்துவ சாதனங்கள் பூங்காவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாநிலங்களில் ஹிமாச்சல பிரதேசமும் ஒன்று. நலகர் மருத்துவ சாதனப் பூங்கா இதன் ஒருபகுதியாகும்.

**7. 'VIDA V1' என்ற பெயரில் தனது முதல் எலக்ட்ரிக் ஸ்கூட்டரை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**

அ. மாருதி சுசூகி



**ஆ. ஹீரோ மோட்டோகார்ப் ☑**

இ. TATA மோட்டார்ஸ்

ஈ. TVS மோட்டார்ஸ்

✓ நாட்டின் மிகப்பெரிய இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனமான, Hero MotoCorp தனது முதல் மின்–ஸ்கூட்டரான 'VIDA V1'ஐ அறிமுகப்படுத்தியதன்மூலம் மின்சார வாகனப்பிரிவில் தடம்பதித்தது. 'VIDA V1' ஆனது Bajaj Chetak, TVS iQube, Ather Energy, Hero Electric, Ola Electric போன்ற பிறவற்றுடன் போட்டியிடும். ஹீரோ மோட்டோகார்ப், அமெரிக்காவைச் சார்ந்த ஜீரோ மோட்டார்சைக்கிள்களில் $60 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்து மின்சார மோட்டார்சைக்கிள்களை கூட்டாக உருவாக்குவதாக அறிவித்துள்ளது. ஏற்கனவே ஏதர் எனர்ஜியில் அது பங்கு கொண்டுள்ளது.

**8. 2022 அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற, 'Center for Civil Liberties' அமைந்துள்ள நாடு எது?**

அ. ஆப்கானிஸ்தான்

**ஆ. உக்ரைன் ☑**

இ. ஈரான்

ஈ. சீனா

✓ 2022 – அமைதிக்கான நோபல் பரிசு பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞர் அலெஸ் பியாலியாட்ஸ்கி, ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பான மெமோரியல் மற்றும் உக்ரேனிய மனித உரிமைகள் அமைப்பான, 'Center for Civil Liberties' ஆகியோருக்கு வழங்கப்பட்டது. நார்வே நோபல் கமிட்டியின்படி, அதிகாரத்தை விமர்சிப்பதற்கும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கும் அவை போராடியுள்ளன. போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**9. 2022 – உலக பருத்தி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Weaving a better future for cotton ☑**

ஆ. Cotton and Sustainability

இ. Assistance to Cotton-4 Nations

ஈ. Cotton by Products and its Markets



✓ உலக பருத்தி நாளானது அக்டோபர்.7 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு (2022) இச்சர்வதேச நிகழ்வின் மூன்றாமாண்டு கொண்டாட்டத்தைக் குறிக்கிறது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO)படி, 2022 – உலக பருத்தி நாளுக்கானக் கருப்பொருள், "Weaving a better future for cotton" என்பதாகும். UNCTAD மற்றும் பன்னாட்டு வர்த்தக மையம் (ITC) 'பருத்தி–4' நாடுகளுக்கு (பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி) உதவி வழங்குவதற்கான முன்முனைவைத் தொடங்கியது.

**10. 'தொழிற்துறை 4.0' என்ற மாநாட்டை ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?**

அ. MSME அமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**இ. கனரக தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஈ. நிதியமைச்சகம்

✓ நடுவண் கனரக தொழிற்துறை அமைச்சர் Dr மகேந்திரநாத் பாண்டே, 'தொழில் 4.0: முன்னிருக்கும் சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லுதல்' மாநாட்டை குஜராத் மாநிலத்தில் உள்ள கெவாடியாவில் தொடங்கி வைத்தார். டிஜிட்டல் உற்பத்தி செயல்முறைகளை பின்பற்றுவதற்கும், தொழிற்துறையில் ஆட்டோமேஷன் மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதற்கும் நாட்டில் தொழிற்துறைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இந்த மாநாடு. இந்த நிகழ்ச்சியில், 'மாடல் ஸ்மார்ட் தொழிற்சாலை மற்றும் மதிப்பீட்டு கருவிகள்' வெளியிடப்பட்டன.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சோதனை அடிப்படையில் இன்று முதல் 'எண்ம ரூபாய்' பயன்பாடு: ரிசர்வ் வங்கி அறிவிப்பு**

இந்தியாவின் முதல் எண்ம ரூபாய் (டிஜிட்டல் ரூபாய்) திட்டம் சோதனை அடிப்படையில் நவ.1ஆம் தேதியிலிருந்து பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக அரசின் நிதிப்பத்திரங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளில் எண்ம ரூபாயின் பயன்பாட்டுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது. அரசு நிதிப்பத்திரங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யும் வங்கிகள் சோதனை அடிப்படையில் எண்ம ரூபாயை பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஸ்பிஐ, பேங்க் ஆஃப் பரோடா, யூனியன் பேங்க், ஹெச்டிஎஃப்சி, ஐசிஐசிஐ, கோட்டக் மகிந்திரா, யெஸ் வங்கி, ஐடிஎஃப்சி, ஹெச்எஸ்பிசி ஆகிய 9 வங்கிகளுக்கு சோதனை அடிப்படையிலான எண்ம ரூபாயின் பயன்பாட்டில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது.

---

**2. சொந்த விண்வெளி நிலையத்துக்கு ஆய்வகக்கலம் அனுப்பியது சீனா**

சீனா சொந்தமாக நிறுவிவரும் தியாங்காங் விண்வெளி நிலையத்தில் இணைப்பதற்கான இரண்டாவது ஆய்வகக் கலத்தை அந்த நாடு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. சீனாவிடமுள்ள இராக்கெட்டுகளிலேயே மிகவும் பிரம்மாண்டமான லாங் மார்ச்–5பி ஒய்4 இராக்கெட்மூலம் அனுப்பப்பட்டுள்ள அந்த ஆய்வுக்கலத்துக்கு 'மெங்டியன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அந்த ஆய்வுக்கலம் தனது சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிறுவப்பட்டதாகவும், பின்னர் அது தியாங்காங் விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்படும்.

முன்னதாக, சீன விண்வெளி நிலையத்துக்கான, 'வென்டியன்' என்ற முதல் ஆய்வுக்கலம் கடந்த ஜூலையில் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது. தியாங்காங் விண்வெளி நிலையத்தின் மையக்கலமான தியான்ஹேவுக்கு இடர்கால மாற்றாகவும் மற்ற நேரங்களில் சக்திவாய்ந்த ஆய்வகமாகவும் 'வென்டியன்' செயல்படும். அவ்விண்வெளி நிலையம் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படத்தொடங்கும்.

---

**1. 2022 – இந்தியா கெம் மாநாட்டை நடத்தும் நகரம் எது?**

அ. பெங்களூரு


**ஆ. புது தில்லி ☑**

இ. ஹைதராபாத்

ஈ. சென்னை

✓ நடுவண் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, "Vision 2030: Chemicals and Petrochemicals Build India" என்ற கருப்பொருளுடன் புது தில்லியின் பிரகதி மைதானத்தில் 2022 – இந்தியா கெம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை கூட்டமைப்புடன் (FICCI) இணைந்து இந்தியா கெம்மின் பன்னிரண்டாவது பதிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. 2021-22ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் இரசாயனங்கள் ஏற்றுமதி $29,296 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

**2. கிரீன்ஃபீல்ட் எலக்ட்ரானிக்ஸ் மேனுஃபேக்ச்சரிங் கிளஸ்டர் அமைக்கப்படவுள்ள இரஞ்சன்காவ்ன் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. மகாராஷ்டிரா ☑**

ஆ. குஜராத்

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ நடுவண் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது மகாராஷ்டிர மாநிலத்தில் புனேவுக்கு அருகிலுள்ள இரஞ்சன்காவ்ன் 3ஆம் கட்டத்தில் அமைக்கப்படவுள்ள கிரீன்ஃபீல்ட் மின்னணு உற்பத்தித் தொகுதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்தொகுப்பின் திட்டச்செலவு ₹492.85 கோடியாகும். நொய்டா, திருப்பதி, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் மின்னணு உற்பத்தித் தொகுதிகள் உள்ளன. அங்கு பல்வேறு தேசிய நிறுவனங்கள் மற்றும் இந்திய துளிர் நிறுவல்கள் தங்கள் அலகுகளை நிறுவியுள்ளன.

**3. யாரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய ஒற்றுமை நாள்' அனுசரிக்கப்படுகிறது?**



அ. 'மகாத்மா' காந்தியடிகள்

**ஆ. சர்தார் வல்லபாய் படேல் ☑**

இ. சுபாஷ் சந்திர போஸ்

ஈ. B R அம்பேத்கர்

✓ சர்தார்வல்லபாய் படேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், 'தேசிய ஒற்றுமை நாள்' அனுசரிக்கப்படுகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய படேல், 550-க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களை ஒன்றிணைப்பதற்கான தனது முயற்சிகளுக்காக, 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்றும் அழைக்கப்படுகிறார். இவ்வாண்டு சர்தார் வல்லபாய் படேலின் 147ஆவது ஆண்டு பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது.

**4. இந்திய ரிசர்வ் வங்கி அதன் சோதனை கட்டத்தில் எந்த வகையான 'நடுவண் வங்கி டிஜிட்டல் நாணயத்தை' வெளியிட்டுள்ளது?**



அ. சில்லறை விற்பனை

**ஆ. மொத்த விற்பனை ☑**

இ. பண்டம்

ஈ. கிரிப்டோகரன்சி

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) மொத்த விற்பனைப் பிரிவினருக்காக, நடுவண் வங்கி ஆதரவுடைய 'எண்ம ரூபாய்'க்கான முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 'நடுவண் வங்கியின் எண்ம நாணயத்தின் செயல்பாடு–மொத்த விற்பனை (இ ₹–W) சோதனைமுறை' என்ற அறிவிப்பில் RBI இதனை அறிவித்துள்ளது. பாரதி வங்கி, பரோடா வங்கி, இந்திய யூனியன் வங்கி, HDFC வங்கி, ICICI வங்கி, கோடக் மஹிந்திரா வங்கி, YES வங்கி, IDFC ஃபர்ஸ்ட் பேங்க் மற்றும் HSBC ஆகிய ஒன்பது வங்கிகள் இதற்காக தேர்வுசெய்யப்பட்டுள்ளன.

**5. தனது விண்வெளி நிலையத்திற்காக, 'மெங்டியான்' என்ற ஆய்வகத்தொகுதியை ஏவியுள்ள நாடு எது?**



அ. ரஷ்யா

ஆ. அமெரிக்கா

**இ. சீனா ☑**

ஈ. இஸ்ரேல்

✓ சீனா தற்போது கட்டப்பட்டுவரும் விண்வெளி நிலையத்தின் ஒருபகுதியாக, 'மெங்டியான்' என்ற ஆய்வகத் தொகுதியை அண்மையில் ஏவியது. இந்த இரண்டாவது ஆய்வகக்கூறு, லாங் மார்ச்–5B Y4 கொண்டு ஏவப்பட்டது. மேலும் இது நுண் புவியீர்ப்பு விசையை ஆயவும் திரவ இயற்பியல், பொருண்ம அறிவியல், எரிப்பு அறிவியல் மற்றும் அடிப்படை இயற்பியல் ஆகியவற்றில் சோதனைகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படும். உயிரியல் மற்றும் விண்வெளி வாழ்க்கை அறிவியலில் கவனம் செலுத்திய, 'வென்டியன்' ஆய்வகக்கலம் இதற்குமுன் அனுப்பப்பட்டது.

**6. 2022 – உலக மனநல நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




அ. Leaving None Behind

**ஆ. Make mental health for all a global priority ☑**

இ. Accessible Mental Health

ஈ. Sustainable Mental Health

✓ உலகம் முழுவதும் மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.10ஆம் தேதி அன்று 'உலக மனநல நாள்' அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2013ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும், உலக நலவாழ்வு அமைப்பு (WHO) உலக மனநல நாளிற்கான உலகளாவிய பிரச்சாரத்தை ஏற்பாடு செய்து வருகிறது. "Make mental health for all a global priority" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக மனநல நாளிற்கானக் கருப்பொருளாகும்.

**7. 21 வயதை அடையும்முன் மணம் செய்துகொண்ட சிறுமிகள் அதிகமுள்ள மாநிலம் எது?**



அ. பீகார்

**ஆ. மேற்கு வங்காளம் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. ஹரியானா

✓ நடுவண் உள்துறை அமைச்சகத்தின் சமீபத்திய மக்கள்தொகை மாதிரி கணக்கெடுப்பின்படி, மேற்கு வங்காளத்தில் 54.9% சிறுமிகள் 21 வயதுக்கு முன்பே மணம் செய்து கொள்கிறார்கள். ஜார்கண்டில், தேசிய சராசரியான 29.5%க்கு எதிராக 54.6%ஆக உள்ளது. மாதிரி பதிவு அமைப்பின் புள்ளிவிவர அறிக்கையின்படி, ஜார்கண்ட் மாநிலத்தில் திருமண வயதை அடைவதற்கு முன்பே திருமணம் செய்து கொள்ளும் சிறுமிகளின் சதவீதம் 5.8ஆக உள்ளது. தேசிய அளவில் இது 1.9 சதவீதமாகவும், கேரளாவில் 0.0 ஆகவும் உள்ளது.

**8. விண்மீனிடை விண்கற்கள் IM1 மற்றும் IM2 ஆகியவற்றைக் கண்டறிந்த நாடு எது?**



அ. சீனா

ஆ. ரஷ்யா

**இ. அமெரிக்கா ☑**

ஈ. இஸ்ரேல்

✓ ஹார்வர்ட் பல்கலைக்கழக வானியல் இயற்பியலாளர்களின் புதிய ஆராய்ச்சியின்படி, முதல் மற்றும் இரண்டாவது விண்மீனிடை விண்கற்களான IM1 மற்றும் IM2 ஆகிய இரண்டும் பொருண்ம வலிமையில் வெளிப்புறமாக உள்ளன. மேலும் இவை சூப்பர்நோவா வெடிப்புகளினால் தோன்றியிருக்கலாம். IM1 ஆனது கடந்த 2014ஆம் ஆண்டில் அமெரிக்க அரசாங்க உணரிகளால் கண்டறியப்பட்டது; கடந்த 2019ஆம் ஆண்டில் விண்மீன்களுக்கிடையேயான பொருண்மமாக அது அடையாளம் காணப்பட்டு நடப்பு 2022இல் உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது விண்மீன் இடை விண்கல்லான IM2 ஆனது NASAஇன் NEO ஆய்வுகளுக்கான மையத்தின் எரிகோள அட்டவணையில் இருந்த தரவுகளின்மூலம் அடையாளம் காணப்பட்டது.

**9. "Our time is now–our rights, our future" என்பது அக்டோபர்.11 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப் பொருளாகும்?**



**அ. சர்வதேச பெண் குழந்தைகள் நாள் ☑**

ஆ. சர்வதேச சிறுபான்மையினர் நாள்

இ. சர்வதேச அகதிகள் நாள்

ஈ. சர்வதேச மூன்றாம் பாலினத்தோர் நாள்

✓ சர்வதேச பெண் குழந்தைகள் நாளானது கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்.11 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டு (2022) சர்வதேச பெண் குழந்தைகள் நாளின் 10ஆம் ஆண்டு கடைப்பிடிப்பாகும். "Our time is now–our rights, our future" என்பது இந்த ஆண்டு பெண் குழந்தைகளுக்கான சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**10. சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு குறித்த 2022ஆம் ஆண்டுக்கான குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**




அ. 113

**ஆ. 123 ☑**

இ. 133

ஈ. 143

✓ சமத்துவமின்மையைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு குறித்த 2022ஆம் ஆண்டுக்கான குறியீட்டில், இந்தியா, ஆறு இடங்கள் முன்னேறியுள்ளது. 161 நாடுகளில் இந்தியா 123ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குறியீட்டை ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனலும் டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் இன்டர்நேஷனலும் இணைந்து தயாரித்துள்ளன. பொதுச்சேவைகள் (சுகாதாரம், கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு), வரிவிதிப்பு மற்றும் தொழிலாளர் உரிமைகள் ஆகிய மூன்று பகுதிகளில் இது அரசாங்க கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அளவிடுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இரண்டாவது முறையாக GST வசூல் ₹1.50 இலட்சம் கோடியைக் கடந்தது!**

நாடு முழுவதும் இரண்டாவது முறையாக GST வசூல் ₹1.50 இலட்சம் கோடியை கடந்துள்ளதாக நடுவண் அரசு தெரிவித்துள்ளது. 2022 ஏப்ரல் வசூலான GST வசூலுக்கு அடுத்தபடியான அதிகபட்சம் அக்டோபர் மாத GST வசூல் ஆகும். தொடர்ந்து 8ஆவது மாதமாக ₹1.40 லட்சம் கோடிக்கும் அதிகமாக GST வசூலாகியுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. GST வசூல் கடந்த ஏப்ரல் மாதத்தில் அதிகபட்சமாக ₹1.68 லட்சம் கோடி வசூலானது. கடந்த ஆண்டு அக்டோபரில் ₹1.30 லட்சம் கோடிக்கு மேல் GST வசூலானது.

அக்டோபர் 2022இல் வசூலான மொத்த GST ₹1,51,718 கோடி, இதில் மத்திய GST ₹26,039 கோடி, மாநில GST ₹33,396 கோடி, ஒருங்கிணைந்த GST ₹81,778 கோடி (சரக்குகள் இறக்குமதிமூலம் வசூலான ₹37,297 கோடி உள்பட) செஸ் ₹10,505 கோடி (சரக்கு இறக்குமதிமூலம் வசூலான ₹825 கோடி உள்ளடங்கியது) ஆகும். அக்டோபர் மாதத்தில் தமிழ்நாட்டில் GST வசூல் 25 சதவீதம் அதிகரித்து ₹9,540 ஆகவும், புதுச்சேரியில் GST வரி வசூல் 34% அதிகரித்து ₹204 கோடி என நடுவணரசு தகவல் தெரிவித்துள்ளது.

**1. கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட ஏழு மாநிலங்கள் கீழ்க்கண்ட எந்தத் தேதியில் தங்கள் உதய நாளைக் கொண்டாடின?**




**அ. நவம்பர்.01 ☑**

ஆ. நவம்பர்.03

இ. நவம்பர்.05

ஈ. நவம்பர்.07

✓ சத்தீஸ்கர், பஞ்சாப், ஹரியானா, மத்திய பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் உட்பட ஏழு மாநிலங்களும், சண்டிகர், இலட்சத்தீவுகள் மற்றும் புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களும் நவம்பர்.01ஆம் தேதி அன்று தங்கள் உதய நாளைக் கொண்டாடுகின்றன. மத்திய பிரதேசத்திலிருந்து பிரித்துருவாக்கப்பட்ட சத்தீஸ்கரில் அதன் 22ஆவது மாநில நாள் தேசிய பழங்குடியின நடன விழாவுடன் கொண்டாப்பட்டது.

**2. 'மன்கர் தாம் கி கௌரவ் கதா' என்ற நிகழ்ச்சியை நடத்திய மாநிலம் எது?**



**அ. இராஜஸ்தான் ☑**

ஆ. குஜராத்

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ இராஜஸ்தானில் உள்ள மன்கர் தாமில் நடைபெற்ற, 'மன்கர் தாம் கி கௌரவ் கதா' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோதி உரையாற்றினார். அதிகம் பேசப்படாத பழங்குடியின மாவீரர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் தியாகங்களுக்கு அவர் அப்போது அஞ்சலி செலுத்தினார். இராஜஸ்தான், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் மற்றும் குஜராத் மக்களின் பொதுவான பாரம்பரியமாக, 'மன்கர்' கருதப்படுகிறது. பிர்சா முண்டாவின் பிறந்தநாளான நவம்பர் 15ஆம் தேதி நாடு முழுவதும், 'ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்' எனக் கொண்டாடப்படவுள்ளது.

**3. மூன்று நாடுகளைச் சேர்ந்த சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கும், 'குடியுரிமைச் சட்டம்' கீழ்க்காணும் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?**

அ. 1947

**ஆ. 1955 ☑**




இ. 1962

ஈ. 1972

✓ ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வந்து தற்போது குஜராத்தின் இரண்டு மாவட்டங்களில் வசிக்கும் ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு குடியுரிமைச் சட்டம், 1955இன்கீழ் இந்திய குடியுரிமை வழங்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது. குடியுரிமைச் சட்டம், 1955இன் கீழ்தான் இந்தக் குடியுரிமை வழங்கப்படுகிறதே ஒழிய சர்ச்சைக்குரிய குடியுரிமை திருத்தச்சட்டம், 2019இன் கீழ் இது வழங்கப்படவில்லை.

**4. எந்த நாட்டுடனான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வணிக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

அ. ஐக்கிய அரபு அமீரகம்



**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. அமெரிக்கா

ஈ. ஐக்கிய இராஜ்ஜியம்

- ✓ நடுவண் வணிகம் & தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தனக்கிணையான ஆஸ்திரேலிய அமைச்சருடன் மெய்நிகராக சந்திப்பு நடத்தினார். 2022 ஏப்ரலில் கையொப்பமிடப்பட்ட IndAus ECTAஇன் (இந்தியா–ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வணிக ஒப்பந்தம்) அங்கீகார நிலைகுறித்து விவாதிப்பதற்காக இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தை முன்கூட்டியே செயல்படுத்துவது குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.

**5. 'ஆபரேஷன் விஜிலன்ட் ஸ்டார்ம்' என்பது அமெரிக்காவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடத்தப்பட்ட தற்காப்புப் பயிற்சியாகும்?**



அ. இந்தியா

ஆ. பிரான்ஸ்

**இ. தென் கொரியா ☑**

ஈ. பாகிஸ்தான்

- ✓ 'ஆபரேஷன் விஜிலன்ட் ஸ்டார்ம்' என்பது அமெரிக்காவுக்கும் கொரிய குடியரசுக்கும் (தென் கொரியா) இடையே நடத்தப்பட்ட ஒரு தற்காப்புப் பயிற்சியாகும். நான்கு நாள் நடந்த இந்தப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான வானூர்திகள் பங்கேற்றன. போர் தயார்நிலை மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சிக்கு வடகொரியாவின் வெளியுறவு அமைச்சகம் எதிர்ப்பு தெரிவித்தது.

**6. புதிய 'வேர்ல்ட் 6–ரெட்' சாம்பியனான இந்தியாவின் ஸ்ரீகிருஷ்ணா சார்ந்த விளையாட்டு எது?**



அ. சதுரங்கம்

**ஆ. ஸ்னூக்கர் ☑**

இ. பூப்பந்து

ஈ. டென்னிஸ்

- ✓ இந்தியாவின் S ஸ்ரீகிருஷ்ணா நடந்து முடிந்த இறுதிப்போட்டியில் பக்ரைனின் ஹபீப் சபாவை தோற்கடித்ததன் மூலம் புதிய, 'வேர்ல்ட் 6–ரெட்' ஸ்னூக்கர் சாம்பியனானார். 22 வயதான ஸ்ரீகிருஷ்ணா ஏற்கெனவே, 'தேசிய 6–ரெட்ஸ்' ஸ்னூக்கர் சாம்பியனாவார். அவர், கடந்த 2019இல், தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பும் வென்றுள்ளார்.

**7. 2022இல், 'IBSAMAR – பன்னாட்டு கடல்சார் பயிற்சியை' நடத்தும் நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. தென்னாப்பிரிக்கா ☑**

இ. பிரேசில்

ஈ. ஜப்பான்

- ✓ IBSAMAR பயிற்சியின் ஏழாவது பதிப்பு, தென்னாப்பிரிக்காவில் வைத்து இந்திய, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகளுக்கு இடையே ஒரு கூட்டு பன்னாட்டு கடல்சார் பயிற்சியாக நடத்தப்படவுளது. இந்திய கடற்படையின் சார்பாக டெக் வகை போர்க்கப்பல், INS தர்காஷ், சேதக் உலங்கூர்தியும் மரைன் கமாண்டோ படையின் (மார்கோஸ்) பணியாளர்களும் இதில் பங்கேற்றனர். IBSAMARஇன் முந்தைய பதிப்பு (IBSAMAR VI) தென்னாப்பிரிக்காவின் சைமன்ஸ் டௌனில் கடந்த 2018ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

**8. 'PowerEX' என்ற பாதுகாப்பு பயிற்சியை நடத்திய நிறுவனம் எது?**

அ. இந்திய கடலோர காவல்படை

**ஆ. இந்திய கணினிவழி அவசரகால பதிலளிப்புக் குழு (CERT-In) ☑**

இ. NASSCOM

ஈ. இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்

✓ இந்திய கணினிவழி அவசரகால பதிலளிப்புக் குழு (CERT–In) Power–CSIRT–களுடன் (Computer Security Incident Response Teams in Power sector) இணைந்து, எரிசக்தித் துறைப் பயன்பாடுகளுக்காக 'PowerEX' என்ற இணைய வெளி பாதுகாப்புப்பயிற்சியை நடத்தியது. 'IT மற்றும் OT அமைப்புகளில் இணையவெளி நிகழ்வை அங்கீகரிப்பது, பகுப்பாய்வு செய்வது மற்றும் பதிலளிப்பது' இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். "Defending Cyber induced disruption in IT & OT infrastructure" என்பது இந்தப் பயிற்சியின் கருப்பொருளாகும்.

### 9. 2022 – உலக தரநிலைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Value of Standardization

**ஆ. Build Back Better ☑**

இ. Standards and Sustainability

ஈ. Businesses and Standards

✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.14ஆம் தேதி உலக தரநிலைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. சர்வதேச தரநிலைகள் நாள் என்றும் அழைக்கப்படும் இந்த நாள், தரப்படுத்தலின் மதிப்பைப் பற்றி நுகர்வோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் வணிகங்களுக்குக் கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. "Build Back Better" என்பது இந்த ஆண்டு (2022) உலக தரநிலைகள் நாளுக்கானக் கருப்பொருளாகும். கடந்த 1956ஆம் ஆண்டில் இலண்டனில் நடந்தேறிய பிரதிநிதிகளின் முதல் கூட்டத்தை நினைவுகூரும் வகையில், அக்டோபர்.14ஆம் தேதி உலக தரநிலைகள் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

### 10. டைம்ஸ் உயர்கல்வியின் (THE) உலக பல்கலைக்கழக தரவரிசை – 2023இல் இந்திய அளவில் முதலிடம்பெற்ற நிறுவனம் எது?

அ. ஐஐடி மெட்ராஸ்

**ஆ. IISc பெங்களூரு ☑**

இ. ஐஐடி கோரக்பூர்

ஈ. ஐஐடி பாம்பே

✓ டைம்ஸ் உயர்கல்வியின் (THE) உலக பல்கலைக்கழக தரவரிசை – 2023 அண்மையில் வெளியிடப்பட்டது. இந்தத் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் தொடர்ந்து 7ஆம் முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஹார்வர்ட் பல்கலைக்கழகம் (USA) மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் (UK) இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன. பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகம் (IISc) இந்திய கல்வி நிறுவனங்களில் முதலிடத்தைத் தக்கவைத்து, 251–300 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாமன்னர் இராஜராஜ சோழனின் பிறந்தநாள் அரசு விழா: தமிழ்நாடு அரசு**

'மாமன்னர்' இராஜராஜ சோழனின் பிறந்தநாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

**சதய விழா:** உலகப்புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரிய கோவிலைக் கட்டிய, 'மாமன்னர்' இராஜராஜ சோழனின் பிறந்த நாள், ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில், சதய விழாவாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

---

## 2. இலக்குகளை இடைமறித்து தாக்கும் ஏடி–1 ஏவுகணை சோதனை வெற்றி

இலக்குகளை இடைமறித்து தாக்கும் ஏடி–1 ஏவுகணை முதல்முறையாக வானில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஏடி–1 என்ற இடைமறித்து தாக்கும் ஏவுகணை வளிமண்டலத்தின் 100 கிமீ உயரத்துக்கு கீழும், அதனைத் தாண்டியும் என இருவிதமாக பாயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொலைதூரத்தில் உள்ள எறிகணைகள் மற்றும் விமானங்களை இடை மறித்துத் தாக்கும். இந்த ஏவுகணை உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நவீன கட்டுப்பாட்டு அமைப்பு, வழிகாட்டு முறைகளைக் கொண்டுள்ளது. இது இலக்கை நோக்கி துல்லியமாக பயணிக்க உதவும்.

இந்த ஏவுகணை ஒடிசாவில் உள்ள APJ அப்துல் கலாம் தீவின் கடற்கரையையொட்டி, வெவ்வேறு இடங்களில் முதல்முறையாக வானில் செலுத்தி வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. இந்தச் சோதனையில் ஏவுகணையின் அனைத்து துணை அமைப்புகளும் எதிர்பார்த்தப்படி சிறப்பாக செயல்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

---

## 3. CRPF பெண் அதிகாரிகள் முதல்முறையாக IGஆக நியமனம்

மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (CRPF) கலவரத் தடுப்பு சிறப்புப் பிரிவான அதிவிரைவுப் படை (RAF) ஐஜியாக முதல்முறையாக பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், CRPFஇன் பிகார் பிரிவுக்கும் முதல் முறையாக பெண் ஐஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் மிகப்பெரிய துணை இராணுவப்படையான CRPFஇல் (3.25 இலட்சம் பணியாளர்கள்), பல ஆண்டுகால காத்திருப்புக்கு பிறகு கடந்த 1987ஆம் ஆண்டில் முதல்முறையாக பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில், CRPF அதிவிரைவுப்படை ஐஜியாக பெண் அதிகாரி ஆனி ஆப்ரகாம், பிகார் பிரிவு ஐஜியாக சீமா துந்தியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக, அப்படையின் தலைமை அலுவலகம் வெளியிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதிவிரைவு படைக்கு பெண் ஐஜி தலைமை தாங்குவது இதுவே முதல்முறையாகும்.

---

**1. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவரும் சர்வதேச நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. நவம்பர்.01

ஆ. நவம்பர்.03

**இ. நவம்பர்.02 ☑**

ஈ. நவம்பர்.07



✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கடந்த 2013ஆம் ஆண்டு முதல், 'ஊடகவியளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மைக்கான சர்வதேச நாள்' என நவம்பர்.2ஐக் கடைப்பிடித்து வருகிறது. 2013 நவம்பர்.2 அன்று மாலியில் இரண்டு பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கப்படாமல் குற்றம் புரிந்தோர் தப்பிப்பது குறித்து இந்த நாள் கவனத்தை ஈர்க்கிறது.

**2. கல்வியமைச்சகத்தின் செயல்திறன் தரவரிசைக் குறியீட்டின்படி, 2020–21ஆம் ஆண்டில் எத்தனை மாநிலங்கள் நிலை–2 தரத்தை எட்டியுள்ளன?**

அ. ஒன்றுமில்லை

ஆ. இரண்டு

இ. நான்கு

**ஈ. ஏழு ☑**



✓ 2020–21ஆம் ஆண்டிற்கான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான செயல்திறன் தரவரிசைக் குறியீட்டை கல்வியமைச்சகம் வெளியிட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பள்ளிக் கல்வி முறைகளின் ஆதார அடிப்படையிலான விரிவான பகுப்பாய்வை இந்தக் குறியீடு கொண்டுள்ளது. கேரளா, பஞ்சாப், சண்டிகர், மகாராஷ்டிரா, குஜராத், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் என மொத்தம் ஏழு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 2020–21இல் நிலை–2 என்ற தரத்தை எட்டியுள்ளன. இத்தரவரிசைக் குறியீடு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பத்துத் தரநிலைகளாக வகைப்படுத்தியுள்ளது; அதில், அதிகபட்சமாக அடையக்கூடிய தரம் நிலை–1 ஆகும்.

**3. ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

**ஆ. வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑**

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. நகர்ப்புற மற்றும் வீட்டு விவகார அமைச்சகம்




✓ 2022–23 இரபி பருவத்தில் (2022 அக்.1 முதல் 2023 மார்ச்.31 வரை) பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரங்களுக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் மற்றும் சல்பர் போன்ற ஊட்டச்சத்துகளை கிலோ கிராமுக்கு மானிய விலையில் வழங்கவேண்டும் என்ற உரத்துறையின் பரிந்துரைக்கு பிரதமர் தலைமையிலான நடுவணமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி நைட்ரஜனுக்கு ₹98.02உம், பாஸ்பரசுக்கு ₹66.93உம், பொட்டாஷுக்கு ₹23.65உம். சல்பருக்கு ₹6.12உம் கிலோவுக்கு மானியமாக வழங்கப்படும். இதன்மூலம் இக்காலக்கட்டத்தில் மொத்தம் ₹51,875 கோடி அளவிற்கு மானியம் அளிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**4. இந்தியாவில் ஆண்டுதோறும், 'ஊழல் விழிப்புணர்வு வாரத்தை' அனுசரிக்கும் நிறுவனம் எது?**

அ. இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ. நடுவண் விழிப்புணர்வு ஆணையம் ☑**

இ. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம்

ஈ. செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா

✓ நடுவண் விழிப்புணர்வு ஆணையமானது ஒவ்வோர் ஆண்டும் ஊழல் விழிப்புணர்வு வாரத்தைக் கடைப்பிடித்து வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஒருமைப்பாடு என்ற செய்தியைப் பரப்புகிறது. நடுவண் விழிப்புணர்வு ஆணையத்தின் புதிய புகார் மேலாண்மை அமைப்புக்கான வலைத்தளத்தை பிரதமர் நரேந்திர மோதி சமீபத்தில் தொடங்கி வைத்தார். 'நெறிமுறைகள் & நன்னடைமுறைகள்' பற்றிய சிற்றேடுகங்களையும் அவர் வெளியிட்டார். 'தடுப்பு விழிப்புணர்வு' பற்றிய சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு மற்றும் அரசாங்க கொள்முதல் குறித்த 'விஜே–வாணி' என்ற சிறப்பு வெளியீடையும் அவர் அப்போது வெளியிட்டார்.

**5. இடைமறித்துத் தாக்கும் AD–1 என்ற எறிகணையின் இரண்டாம் கட்ட சோதனையை நடத்திய நிறுவனம் எது?**

அ. ISRO

**ஆ. DRDO ☑**

இ. BEL

ஈ. HAL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) இடைமறித்துத் தாக்கும் AD–1 என்ற எறிகணையின் இரண்டாம் கட்ட சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இந்த எறிகணை ஒடிசா கடற்கரையில் உள்ள APJ அப்துல்கலாம் தீவிலிருந்து சோதிக்கப்பட்டது. AD–1 என்ற இடைமறித்துத் தாக்கும் ஏவுகணை வளிமண்டலத்தின் 100 கிமீ உயரத்துக்குக் கீழும், அதனைத் தாண்டியும் என இருவிதமாக பாயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொலைதூரத்தில் உள்ள எறிகணைகள் மற்றும் விமானங்களை இடைமறித்துத் தாக்கும்.

**6. ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் செயல்படுத்தப்படும் HIMCAD திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ. ஊட்டச்சத்து



**ஆ. நீர்ப்பாசனம் ☑**

இ. திறன் மேம்பாடு

ஈ. வேலைவாய்ப்பு

✓ ஹிமாச்சல பிரதேச மாநில அரசானது, 'HIMCAD' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது; இது உருவாக்கப்பட்ட நீர்ப்பாசனத் திறனுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய நீர்ப்பாசனத் திறனுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கிறது. இது சிறந்த நீர்சேமிப்பு, பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைந்த உழவு ஆகியவற்றிற்காக விவசாயிகளின் வயல்களில் ஒரு முற்றான இணைப்பை வழங்கும். இத்திட்டத்தின்கீழ், 15,242 ஹெக்டேர் பரப்பளவு கட்டளைப் பகுதி மேம்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

**7. 'அலுவல் மொழிகளுக்கான நாடாளுமன்றக் குழு'வின் தலைவர் யார்?**

அ. இராஜ்நாத் சிங்



**ஆ. அமித் ஷா ☑**

இ. நிதின் கட்கரி

ஈ. பியூஷ் கோயல்

- ✓ நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையிலான அலுவல் மொழிகளுக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை அண்மையில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பொது அலுவலகங்கள், IIT மற்றும் IIM போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் நீதிமன்றங்களில் ஹிந்தி உள்ளிட்ட இந்தியாவின் அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது. ஹிந்தி பேசாத மாநிலங்களில் ஹிந்தியைத் திணிக்கும் நடுவணரசின் ஒரு முயற்சியாக தென் மாநிலங்கள் இதனைக் குற்றஞ்சாட்டி வருகின்றன.

### 8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Sendai Framework' உடன் தொடர்புடைய துறை எது?

அ. நெகிழி ஒழிப்பு

**ஆ. பேரிடர் அபாயக் குறைப்பு ☑**

இ. மின்னணுக் கழிவுகளைக் கையாளுதல்

ஈ. பயங்கரவாத எதிர்ப்பு




- ✓ பேரிடர் அபாயக் குறைப்புக்கான பன்னாட்டு நாள் ஒவ்வோர் ஆண்டும் அக்.13 அன்று அனுசரிக்கப்படுகிறது. பல்வேறு பேரிடர்களின்போது உயிர்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு இழப்புகளைத் தடுப்பதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அங்கீகரிப்பதற்காகவுமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. "Early Warning for All" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சர்வதேச நாளுக்கானக் கருப்பொருளாகும். இது செண்டாய் கட்டமைப்பின் இலக்கு G ஆகும். பேரிடர் அபாயத்தைக் குறைப்பத –ற்கான 'செண்டாய் கட்டமைப்பு 2015–2030' என்பது பேரிடர் அபாயத்திலிருந்து வளர்ச்சி ஆதாயங்களைப் பாதுகாப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

### 9. 'Ambedkar: A Life' என்ற வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவர் யார்?

**அ. சசி தரூர் ☑**

ஆ. அமிதவ குமார்

இ. அபை K

ஈ. சஞ்சய பாரு



- ✓ "Ambedkar: A Life" என்பது சசி தரூரால் எழுதப்பட்ட பீம் ராவ் ராம்ஜி அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்று நூலாகும். அம்பேத்கரின் வாழ்க்கைப்பயணம், ஒடுக்கப்பட்டோரை இழிவுபடுத்திய சமூகத்தில் அவர் கடக்கவேண்டியிருந்த தடைகள், தீண்டாமையை சட்டவிரோதமாக்குவதற்கான அவரது போராட்டம் ஆகியவற்றின் நுண்ணறிவுகளை இந்த நூல் கூறுகிறது. அப்படிச்செய்வதன்மூலம், "அவர் இன்னும் பிறவாத லட்சக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றினார்; ஒரு பண்டைய நாகரிகத்தை நவீன சகாப்தமாக தனது அறிவுத்திறன் மற்றும் எழுத்தாற்றலால் மாற்றினார்" என்று எழுதுகிறார் சசி தரூர்.

### 10. அண்மையில் 36ஆவது தேசிய விளையாட்டு – 2022 போட்டிகளில் 8 பதக்கங்களை வென்ற சஜன் பிரகாஷ் சார்ந்த விளையாட்டு எது?

அ. துப்பாக்கி சுடுதல்

ஆ. மல்யுத்தம்

**இ. நீச்சல் ☑**

ஈ. டென்னிஸ்



- ✓ கேரளாவைச் சேர்ந்த இந்திய நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ், 36ஆவது தேசிய விளையாட்டுப்போட்டியில் 5 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் உட்பட 8 பதக்கங்களை வென்றார். இராஜ்கோட்டில் உள்ள சர்தார் படேல் அக்வாடிக் வளாகத்தில், குஜராத் மாநில முதல்வர் பூபேந்திர பட்டேலிடமிருந்து, 'சிறந்த தடகள வீரர்' விருதையும் அவர் பெற்றார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செஸ்: பிரக்ஞானந்தா, நந்திதா சாம்பியன்**

ஆசிய செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்திர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுமான பிரக்ஞானந்தா ஓபன் பிரிவிலும், நந்திதா மகளிர் பிரிவிலும் வாகை சூடினர். போட்டியின் ஒன்பது சுற்றுகள் முடிவில், ஓபன் பிரிவில் பிரக்ஞானந்தா முதலிடமும் (7 புள்ளிகள்), ஹர்ஷா பாரதகோடி 2ஆம் இடமும் (6.5), அதிபன் 3ஆம் இடமும் (6.5) பிடித்தனர். மகளிர் பிரிவில் நந்திதா (7.5), பிரியங்கா நுடாகி (6.5), திவ்யா தேஷ்முக் (6.5) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களையும் எட்டினர்.

**1. உயர்கல்வி நிறுவனங்களின் மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**



**அ. K இராதாகிருஷ்ணன் ☑**

ஆ. கஸ்தூரி இரங்கன்

இ. அமிதாப் காந்த்

ஈ. V K பால்

✓ உயர்கல்வி நிறுவனங்களின் மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தை வலுப்படுத்துவதற்காக ஓர் உயர்மட்ட குழுவை நடுவணரசு அமைத்துள்ளது. ஐஐடி கான்பூரின் நிர்வாகக் குழுவின் தலைவர் K இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஐஐடி கவுன்சில் நிலைக்குழுவின் தலைவராகவும் அவர் உள்ளார்.

**2. 'காலின்ஸ் அகராதியால் 2022ஆம் ஆண்டின் சிறந்த சொல்' எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் எது?**

அ. Lockdown

**ஆ. Permacrisis ☑**

இ. Pandemic

ஈ. Non-Fungible Token

✓ 'உறுதியற்ற தன்மை மற்றும் பாதுகாப்பின்மையின் நீடித்த காலத்தை' விவரிக்கும் 'Permacrisis' என்ற சொல், 'காலின்ஸ் அகராதியால் 2022ஆம் ஆண்டின் சிறந்த சொல்' என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சொல், பருவநிலை மாற்றம், ஐரோப்பாவில் போர், வாழ்க்கைச் செலவின நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பம் ஆகியவற்றால் ஏற்படும் சவால்களுடன் தொடர்புடையது. இது முதன்முதலில் 1970களில் கல்விச்சூழல்களில் பயன்படுத்தப்பட்டது. 2020ஆம் ஆண்டில், காலின்ஸ், "லாக்டௌன்" என்பதை அதன் ஆண்டின் சொல்லாகத் தேர்ந்தெடுத்தது மற்றும் கடந்த ஆண்டு (2021) அது "NFT- Non-Fungible Token" என்ற சொல்லைத் தேர்வுசெய்தது.

**3. 'Beidou' என்ற செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பை அறிமுகப்படுத்திய நாடு எது?**

அ. ஜப்பான்

**ஆ. சீனா ☑**

இ. இரஷ்யா

ஈ. இஸ்ரேல்

✓ சீனா தனது உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'பெய்டோ' செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பின் உலகளாவிய வரம்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் குளோபல் பொசிஷனிங் சிஸ்டத்திற்கு (GPS) மாற்றாக சீனாவின் அமைப்பாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. 'பெய்டோ' கடந்த 2013ஆம் ஆண்டில் தாய்லாந்தில் அதன் வலையமைப்பிற்காக தொடர்ந்து செயல்படும் மூன்று குறிப்பு நிலையங்களுள் (Continuously Operating Reference Stations – CORS) ஒன்றை முதலாவதாக அமைத்தது.

**4. 2022 நவம்பர் நிலவரப்படி, உலகின் மிகநீளமான பயணிகள் இரயிலை அறிமுகம் செய்துள்ள நாடு எது?**



அ. ஜப்பான்

ஆ. சீனா

**இ. சுவிச்சர்லாந்து ☑**

ஈ. சுவீடன்

- ✓ 100 பெட்டிகள், 4550 இருக்கைகள், 1910 மீட்டர் நீளங்கொண்ட உலகின் மிகநீளமான பயணிகள் இரயிலை சுவிச்சர்லாந்து அறிமுகப்படுத்தியுள்ளது. சுவிச்சர்லாந்தின் முதல் இரயில்வேயின் 175ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், சுவிஸ் போக்குவரத்து நிறுவனமான ரேடியன் இரயில்வே, மிகநீளமான பயணிகள் இரயிலுக்கான உலக சாதனையைப் படைத்துள்ளது. சுவிச்சர்லாந்தின் ஆல்ப்ஸ் மலைப்பகுதி வழியாகச் செல்லும் இந்த இரயில் 25 புதிய 'கேப்ரிகார்ன்' மின்சார இரயில்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**5. 2022 நவம்பர் நிலவரப்படி, பூமியிலிருந்து இதுவரை ஏவப்பட்ட மிக ஆற்றல்வாய்ந்த ஏவுகணை எது?**

அ. மினிட்மேன் ஹெவி

**ஆ. ஃபால்கன் ஹெவி ☑**

இ. லாங் மார்ச் 5 B

ஈ. PSLV 52



- ✓ ஸ்பேஸ்எக்ஸ் தனது ஃபால்கன் ஹெவி ஏவுகணையை ஏவியது. அந்த ஏவுகணை பல்வேறு அமெரிக்க இராணுவ செயற்கைக்கோள்களை அதற்குரிய சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது. பூமியிலிருந்து இதுவரை ஏவப்பட்ட மிக ஆற்றல்வாய்ந்த ஏவுகணை இதுவாகும். ஸ்பேஸ்எக்ஸால் நடப்பாண்டில் (2022) ஏவப்படும் 50ஆவது ஏவுகலம் இதுவாகும். ஸ்பேஸ்எக்ஸின் 49ஆவது ஏவுகலம் ஃபால்கன் 9 ஆகும். கணக்கிட்டுப்பார்த்தால் 6.10 நாட்களுக்கு ஒருமுறை அந்த நிறுவனம் ஒரு ஏவுகலத்தை ஏவுகிறது.


**6. இந்தியாவால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல், கீழ்காணும் எந்த வகையினைச் சார்ந்த கப்பலாகும்?**

அ. சிசுமார்

**ஆ. அரிஹந்த் ☑**

இ. சிந்துகோஷ்

ஈ. கல்வாரி



- ✓ இந்தியாவின் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பலான ஐஎன்எஸ் அரிஹந்த், 2022ஆம் ஆண்டு அக்.14ஆம் தேதி வங்கக் கடலிலிருந்து, 'மிக அதிக துல்லியத்துடன்' வெற்றிகரமாக ஓர் எறிகணையை ஏவியது. அரிஹந்த் – வகுப்பு நீர்மூழ்கிக்கப்பல்கள் அணுசக்தியால் இயங்குவதோடு எறிகணைகளை ஏவுவதற்கான அதிநவீன தொழில் நுட்பக்கப்பல் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கப்பல்களாகும். இந்தியாவினால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் இவை.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, SCO–RATSஇன் தலைமையகம் எங்குள்ளது?**

அ. ஷாங்காய்

ஆ. பெய்ஜிங்

**இ. தாஷ்கண்ட் ☑**

ஈ. அஸ்தானா



- ✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் (RATS) செயற்குழு என்பது உஸ்பெகிஸ்தானின் தலைநகரமான தாஷ்கண்டில் உள்ள, 'SCO–RATS'இன் நிரந்தர அமைப்பாகும். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பின் கவுன்சிலின் கூட்டம் 2022 அக்.14 அன்று புது தில்லியில் நடைபெற்றது. சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உறுப்புநாடுகளால் அப்போது முடிவு செய்யப்பட்டது.

**8. அப்துல் இலத்தீஃப் ரஷீத் என்பார் சமீபத்தில் எந்த நாட்டின் / பிரதேசத்தின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ. பாலஸ்தீனம்

**ஆ. ஈராக் ☑**

இ. எகிப்து

ஈ. ஏமன்

✓ ஈராக்கிய சட்டமியற்றுநர்கள் அப்துல் இலத்தீப் ரஷீத்தை ஈராக்கின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது ஈராக் நாட்டிற்கான புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு முக்கியமான படியாகும். இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் ரஷீத் 162 வாக்குகளைப் பெற்றார், 99 வாக்குகளைப் பெற்ற பர்ஹாம் சாலியை அவர் தோற்கடித்தார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரஷீத், ஏற்கெனவே கடந்த 2003இல் நாட்டின் ஐந்தாவது அதிபராக பதவி வகித்துள்ளார்.

**9. ஜோசப் ரெசின்ஸ்கி என்பார் பின்வரும் எதனுடன் தொடர்புடையவர்?**



அ. எய்ட்ஸ் ஒழிப்பு

ஆ. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

**இ. வறுமையொழிப்பு ☑**

ஈ. ஆட்கடத்தல் ஒழிப்பு

✓ ஜோசப் ரெசின்ஸ்கி என்பார் ஒரு பிரெஞ்சு அருட்தந்தையும் மனிதாபிமான ஆர்வலருமாவார். கடந்த 1987ஆம் ஆண்டில், ஜோசப் ரெசின்ஸ்கி வறுமையொழிப்புக்கான சர்வதேச நாளை (அக்டோபர்.17) தொடங்கினார்; பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் அந்த நாள் அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. "Dignity for all in practice" என்பது இந்த ஆண்டு (2022) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

**10. பொது விவகாரங்கள் குறியீடு–2022இன்படி, இந்தியாவில் சிறப்பாக நிர்வகிக்கப்படும் சிறிய மாநிலம் எது?**



அ. கோவா

**ஆ. சிக்கிம் ☑**

இ. மேகாலயா

ஈ. மணிப்பூர்

✓ பொது விவகாரங்கள் குறியீடு–2022இல் பெரிய மாநிலங்களின் பிரிவில் ஹரியானா முதலிடத்தில் உள்ளது. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதிக்கருப்பொருள்களில் ஹரியானா மாநிலம் முன்னணியில் உள்ளது. இது 0.6948 மதிப்பெண்களுடன் முக்கிய மாநிலங்களில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாடு, கேரளா, சத்தீஸ்கர், பஞ்சாப் மற்றும் கர்நாடகாபோன்ற பல மாநிலங்கள் அதைத் தொடர்ந்த இடங்களில் உள்ளன.

✓ மறுபுறம், சிக்கிம் இந்தியாவிலேயே சிறந்த நிர்வாகம் கொண்ட சிறிய மாநிலமாக தனது நிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. பெங்களூருவைச் சேர்ந்த இலாப நோக்கற்ற சிந்தனைக் குழுவான பொது விவகாரங்கள் மையம் இந்தக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இராஜாராம் மோகன் இராயின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்ட நாட்டிய நாடகம்**

'நவீன இந்தியாவின் விடிவெள்ளி' என்று அழைக்கப்படும் இராஜாராம் மோகன் ராயின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகம், கடமைப்பாதை மற்றும் இந்திய நுழைவு வாயிலில் நடைபெறவுள்ளது. இராஜாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளையால் நடத்தப்படும், 'யுகபுருஷர் இராஜாராம் மோகன் இராய்' என்ற பெயரிலான

இந்நிகழ்வு, 'பெண்களுக்கு மரியாதை' என்ற கருப்பொருளில் அமைந்திருக்கும். விடுதலையின் அமுதப்பெருவிழா நிகழ்வின் ஒருபகுதியாக, ராஜா ராம் மோகன் ராயின் 250ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கடந்த மே மாதம், மத்திய கலாச்சார அமைச்சகம் ஓராண்டு கொண்டாட்டத்தைத் தொடங்கியது.

---

**2. இந்திய சர்வதேச திரைப்பட விழா இம்மாதம் 20 முதல் 28 வரை கோவாவில் நடைபெறுகிறது**

1952இல் நிறுவப்பட்ட இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI) ஆசியாவின் மிகமுக்கியமான திரைப்பட விழாக்களில் ஒன்றாகும். சுற்றுலா மாநிலமான கோவாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும், இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படங்கள், வெளியிடப்படும். உலக திரையரங்குகளுக்கு ஒரு பொதுவான தளத்தை வழங்குவதன் மூலம், திரைப்படக்கலையின் சிறப்பை முன்வைக்க அவர்களுக்கு உதவுவதன்மூலம் இவ்விழா இந்நோக்கங்களைத் தொடர்கிறது; பல்வேறு நாடுகளின் திரைப்பட கலாச்சாரங்களை அவர்களின் சமூக மற்றும் கலாச்சார நெறிமுறைகளின் பின்னணியில் புரிந்துகொள்வதற்கும் பாராட்டுவதற்கும் பங்களிக்கிறது; அதன்மூலம் உலக மக்களிடையே நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு கோவாவில் முதன்முறையாக நடைபெற்ற இந்தத் திரைப்பட விழாவின் நிரந்தர இடமாக கோவாவை 2014இல் அறிவிக்கப்பட்டது.

---

**3. இந்தியாவின் முதல் வாக்காளர் ஷியாம் சரண் நெகி மறைவு**

சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளரான ஷியாம் சரண் நெகி காலமானார். அவருக்கு வயது 106. நாடு சுதந்திரம் அடைந்த பின், முதல்முறையாக பொதுத்தேர்தல் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அப்போது கடுமையான குளிர்காலம், பனிப்பொழிவு ஆகியவற்றை கருத்தில்கொண்டு, ஹிமாசல பிரதேச மாநிலம் கின்னௌர் பகுதியில் கடந்த 1951ஆம் ஆண்டு அக்.25ஆம் தேதி முன்கூட்டியே வாக்குப்பதிவு நடைபெற்றது. நாட்டின் இதர பகுதிகளில் 1952ஆம் ஆண்டு ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் வாக்குப்பதிவு நடந்தது.

இந்தத் தேர்தலின்போது கின்னௌரில் உள்ள சினி கிராமத்தில் (தற்போது 'கல்பா' என்றழைக்கப்படுகிறது) ஷியாம் சரண் நெகி முதல் நபராக வாக்களித்தார். இதன்மூலம் சுதந்திர இந்தியாவில் வாக்களித்த முதல் நபர் என்ற பெருமையை அவர் பெற்றார். இதுவரை அவர் 34 முறை வாக்களித்துள்ளார்.

---

**4. 27ஆவது ஐநா பருவநிலை மாற்ற மாநாடு: எகிப்தில் இன்று தொடக்கம்**

எகிப்தில் 27ஆவது ஐநா பருவநிலை மாற்ற மாநாடு தொடங்கவுள்ளது. எகிப்தில் உள்ள ஷர்ம்–அல்–ஷேக் நகரில் நவ.6–8 வரை 27ஆவது ஐநா பருவநிலை மாற்ற மாநாடு நடைபெறவுள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மாநாட்டில் 198 நாடுகள் பங்கேற்கவுள்ளன. இதில் பருவநிலை மாற்றத்தை எவ்வாறு அனைவரும் இணைந்து எதிர்கொள்வது என்பது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு டென்மார்க் தலைநகரம் கோபன்ஹேகனில் பருவநிலை மாற்ற மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள வளரும் நாடுகளுக்கு உதவும் நோக்கில், 2020ஆம் ஆண்டுக்குள் வருடந்தோறும் 100 பில்லியன் டாலர்களை கூட்டாக திரட்ட வளர்ந்த நாடுகள் உறுதியேற்றன. ஆனால் அதனை அந்த நாடுகள் செய்யவில்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு மாநாட்டில் இதர வளரும் நாடுகளுடன் இணைந்து வளர்ந்த நாடுகளுக்கு இந்தியா அழுத்தம் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1. 2022 – தழுவல் இடைவெளி அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. WEF

**ஆ. UNEP ☑**

இ. UNFCCC

ஈ. NITI ஆயோக்

✓ ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) 'Adaptation Gap Report 2022: Too Little, Too Slow – Climate Adaptation Failure Puts World at Risk' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கேற்ப உலகம் தனது முனைவுகளை விரைவுப்படுத்தவேண்டும் என்று அறிக்கை கண்டறிந்துள்ளது. திட்டமிடல், நிதியளித்தல் மற்றும் தழுவல் செயல்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள முன்னேற்றத்தையும் இந்த அறிக்கை பட்டியலிடுகிறது.

**2. 'ஸ்வச் சர்வேக்ஷன் கிராமப்புறம் – 2023 கருவித்தொகுப்பை' அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. ஜல்சக்தி அமைச்சகம் ☑**

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

✓ நடுவண் ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை 7ஆவது இந்திய நீர் வாரத்தின் இரண்டாவது நாளில், 'கிராமப்புற WASH கூட்டாண்மை – முன்னோக்கிச் செல்லும்வழி' குறித்த தொழினுட்ப அமர்வை நடத்தியது. 'WASH' என்பது நீர், தூய்மை மற்றும் நலவாழ்வு (WASH) என்பதைக் குறிக்கிறது. நடுவண் ஜல்சக்தி அமைச்சர் ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் (SSG) 2023–க்கான கருவித்தொகுப்பையும், 'Twinpit to Retrofit' அபியான் என்ற இணையதளத்தையும் தொடங்கி வைத்தார்.

**3. 2022 – 'உலகப் பயணச் சந்தையை' நடத்தும் நகரம் எது?**

**அ. லண்டன் ☑**

ஆ. பாரிஸ்

இ. நியூயார்க்

ஈ. லொசன்னே

✓ லண்டனில் நவம்பர் 07 முதல் 09 வரை நடைபெறும் உலகப் பயணச்சந்தை பொருட்காட்சி 2022இல் நடுவண் சுற்றுலா அமைச்சகம் பங்கேற்கிறது. இது மிகப்பெரிய சர்வதேச பயணக் கண்காட்சிகளில் ஒன்றாகும். இந்த ஆண்டு கண்காட்சியின் கருப்பொருள், "பயணத்தின் எதிர்காலம் இப்போது தொடங்குகிறது" என்பதாகும். கடந்த 2019ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்களிப்பு மொத்தப் பொருளாதாரத்தில் 5.19 சதவீதமாகும். கடந்த 2019ஆம் ஆண்டில், இந்திய சுற்றுலாத்துறை 79.86 மில்லியன் வேலைவாய்ப்புகளைப் (நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு) பெற்றுள்ளது.

**4. 'உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாளைக்' கடைப்பிடிக்க முதலில் பரிந்துரைத்த நாடு எது?**

**அ. ஜப்பான் ☑**

ஆ. சீனா

இ. சுவிச்சர்லாந்து

ஈ. சுவீடன்



- ✓ இயற்கைப் பேரிடர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.5ஆம் தேதி அன்று உலக ஆழிப்பேரலை (சுனாமி) விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாளானது முதலில் ஜப்பானால் பரிந்துரைக்கப்பட்டது. கடந்த 2015 டிசம்பரில், ஐநா பொதுச்சபை நவம்பர்.5ஆம் தேதியை உலக ஆழிப்பேரலை விழிப்புணர்வு நாளாக அறிவித்தது.

- ✓ கடந்த 2004ஆம் ஆண்டில் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட ஆழிப்பேரலைக்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு, உலகநாடுகள் ஜப்பானின் கோபியில் ஒன்றுகூடி, 10 ஆண்டுகால ஹியோகோ செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்டன. கடந்த 100 ஆண்டுகளில், சுமார் 58 ஆழிப்பேரலைகள் 260,000 உயிர்களைப் போக்கியுள்ளன.

**5. சமீபத்தில் குரோஷியாவின் ஒசிஜெக்கில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் (ISSF) உலக சாம்பியன்ஷிப் ஷாட்கன் போட்டியில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. முதலாவது

ஆ. நான்காவது

இ. மூன்றாவது

**ஈ. ஐந்தாவது ☑**



- ✓ சமீபத்தில், குரோஷியாவின் ஒசிஜெக்கில் நடந்த சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் (ISSF) உலக சாம்பியன்ஷிப் ஷாட்கன் போட்டியில் இந்தியா ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் ஐந்தாவது இடத்தைப் பிடித்து போட்டியை நிறைவு செய்தது.

**6. வடகிழக்குப் பிராந்தியத்தின் விரைவான மற்றும் ஆற்றல்வாய்ந்த மீத்திறன் கணினியான பரம்–இஷானுக்கு மாற்றாக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மீத்திறன் கணினி எது?**

அ. பரம மேகா

**ஆ. பரம காமரூபா ☑**

இ. பரம தேகா

ஈ. பரம்பொருள்



- ✓ அண்மையில், இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு இந்தியாவின் அண்மைய மீத்திறன் கணினியான பரம–காமரூபாவை அறிமுகப்படுத்தினார். இது அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள வரலாற்று ரீதியாக புகழ்பெற்ற அரசான காமரூபாவின் பெயரைத்தாங்கிய உயர் செயல்திறன்கொண்ட மீத்திறன் கணினியாகும். இந்த மீத்திறன் கணினி வடகிழக்குப் பிராந்தியத்தின் விரைவான மற்றும் ஆற்றல்வாய்ந்த மீத்திறன் கணினியாக உள்ள பரம்–இஷானுக்கு மாற்றாக உள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு கௌஹாத்தி ஐஐடியில் பரம்–இஷான் அறிமுகப்படுத்தப்பட்டது.

- ✓ தேசிய மீத்திறன் கணினி திட்டத்தின்கீழ் IIT கௌகாத்தியில் பரம்–காமரூபா நிறுவப்பட்டது; இது மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கூட்டு முயற்சியாகும். நாடு முழுவதும் இதுபோன்ற 15 மீத்திறன் கணினிகள் பயன்பாட்டில் உள்ளன.

**7. வியட்நாமில் நடைபெற்ற ஆறாவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் கல்வியமைச்சர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட முக்கிய முனைவுகள் யாவை?**

அ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, 2022

ஆ. அறிவு மற்றும் வேலைவாய்ப்புச் சட்டக்கொள்கை, 2022

**இ. தேசிய கல்விக் கொள்கை, 2020 ☑**

ஈ. மேலே உள்ள அனைத்தும்



- வியட்நாமின் ஹனோய் நகரத்தில் நடந்த 6ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டின் கல்வியமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது. கல்வியமைச்சகத்தின் இணைச்செயலாளர் (சர்வதேச ஒத்துழைப்பு) நீதா பிரசாத் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினார். தேசிய கல்விக் கொள்கை, 2020இன் முக்கிய முனைவுகள் மற்றும் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறையில் இந்தியா மற்றும் கிழக்காசிய உச்சிமாநாடு நாடுகளின் முயற்சிகள் பற்றியும் அவர் தெரிவித்தார்.

**8. சரக்குப் போக்குவரவு குறியீடு – 2022இல், 'சாதனையாளர்கள்' பிரிவில் வைக்கப்பட்டுள்ள மாநிலங்கள் எவை?**




அ. கேரளா


**ஆ. குஜராத் ☑**

இ. கர்நாடகா

ஈ. ஹரியானா

- நடுவண் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது நான்காவது LEADS (மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரவை எளிதாக்குதல்)–2022 அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம் மற்றும் குஜராத் ஆகியவை சரக்குப் போக்குவரவு குறியீடு – 2022இல், 'சாதனையாளர்கள்' பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

**9. 3ஆவது உலக குச்சிப்புடி நாட்டியோத்சவமானது கீழ்க்காணும் யாரின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்படுகிறது?**



அ. பிர்ஜு மகராஜ்

ஆ. மைதிலி சந்தேல்கர்

இ. கஜனேந்திர மகாபதி

**ஈ. வேம்பட்டி சின்ன சத்தியம் ☑**

- மூன்றாவது உலக குச்சிப்புடி நாட்டியோத்சவமானது விஜயவாடாவில் அக்டோபர்.14 அன்று தொடங்கியது. புகழ்பெற்ற குச்சிப்புடி நடனக்கலைஞர் வேம்பட்டி சின்ன சத்யத்தின் 93ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் மூன்று நாள் நடக்கும் விதமாக இந்த நடன விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**10. ஆந்திர பிரதேசத்தில் Dr சோபா நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றவர் யார்?**



அ. மேனகா பாணிக்ரஹி

ஆ. வெங்கடேஷ் கிரி

இ. மஹதூர் ரெட்டி

**ஈ. பத்மஜா ரெட்டி ☑**

- 3ஆவது உலக குச்சிப்புடி நாட்டியத் திருவிழாவின்போது, டாக்டர் வேம்பட்டி சின்ன சத்தியம் வாழ்நாள் சாதனையாளர் விருது பால கொண்டலா இராவுக்கும், குமரி லங்கா அன்னபூமா தேவிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வனஜா உதய்க்கும் வழங்கப்படும். பத்மஜா ரெட்டிக்கு டாக்டர் சோபா நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதும், வேம்பட்டி வெங்கட் சேவா புரஸ்கார் ஸ்ரீகாந்த் இரகுபத்ருனிக்கும் வழங்கப்படும்.

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2021ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங் கேல் (கைவிளக்கேந்திய காரிகை) விருதுகளை இந்தியக் குடியரசுத்தலைவர் வழங்கினார்**

செவிலியர்கள் மற்றும் செவிலிப்பணிகளில் ஈடுபடுவோர் சமூகத்திற்கு ஆற்றிய சிறந்த சேவைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம் கடந்த 1973ஆம் ஆண்டு தேசிய புளோரன்ஸ் நைட்டிங் கேல் விருதுகளை ஏற்படுத்தியது.

---

**2. அதிகரிக்கும் காச நோய் பரவல்... பாதிப்பு விகிதம் 13% உயர்வு**

தமிழ்நாட்டில் நிகழாண்டு 77,000 பேர் காசநோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025–க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதன் பயனாக காசநோய் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை காசநோயைக் குணப்படுத்தும் விகிதம் கணிசமாக உயர்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளில் 84% பேரை முதல் சிகிச்சையிலேயே குணப்படுத்துவதாகவும், தொடர் சிகிச்சைகள்மூலம் மீதமுள்ளவர்களையும் பூரண குணமாக்குவதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இந்நிலையில், நிகழாண்டில் தனியார், அரசு மருத்துவமனைகளில் காசநோய் பாதிப்புடன் அனுமதிக்கப்பட்டிருந்தோரின் தரவுகளை ஆய்வுசெய்தபோது நாடு முழுவதும் 10.28 இலட்சம் பேருக்கு அந்நோய் தாக்கம் இருந்தது தெரியவந்தது. கடந்த சில ஆண்டுகளாகவே உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட வடமாநிலங்களில்தான் காசநோய் பாதிப்பு அதிகமாக இருந்து வருகிறது. அதன் நீட்சியாகவே நிகழாண்டின் புள்ளி விவரங்களும் அமைந்துள்ளன. குறிப்பாக உத்தர பிரதேசத்தில் மட்டும் 4.27 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 77,019 பேருக்கு அந்நோயின் பாதிப்பு இருந்தது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை 13% குறைவாக இருந்தது. அதாவது, அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் 69,171 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். காசநோய்க்கும், கரோனா தொற்றுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் இருப்பதால், பலர் முன்கூட்டியே பரிசோதனை செய்துகொண்டதுகூட அந்நோய் பாதிப்பு அதிகமாக கண்டறியப்பட்டதற்கு காரணமாக இருக்கலாம் என மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

**3. இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் ஏற்றுமதி: ரஷியா முதலிடம்**

கடந்த அக்டோபர் மாதத்தில் இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்த நாடுகள் பட்டியலில் ரஷியா முதலிடம் பிடித்துள்ளது. பல ஆண்டுகாலமாக இந்தப் பட்டியலில் முன்னணியில் இருந்த சவூதி அரேபியா, இராக் ஆகிய நாடுகள் பின்தங்கியுள்ளன.

கடந்த 2022 மார்ச் மாத நிலவரப்படி இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷியாவின் பங்கு 0.2 சதவீதம் மட்டுமே இருந்து வந்தது. இதுவே அக்டோபரில் ஒரு நாளைக்கு 9,35,556 பேரல் இறக்குமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் 22 சதவீதம் ரஷியாவில் இருந்து வந்துள்ளது. இதற்கு அடுத்து இராக்கில் இருந்து 20.5 சதவீதம், சவூதி அரேபியாவில் இருந்து 16 சதவீதம் இறக்குமதியாகியுள்ளது.

---

**4. சண்டீகர் விமான நிலையத்துக்கு பகத் சிங் பெயர்: நடுவண் அரசு அறிவிப்பு வெளியீடு**

சண்டீகர் சர்வதேச விமான நிலையத்தை, 'ஷாஹித் பகத் சிங் சர்வதேச விமான நிலையம்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விமான போக்குவரத்துத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இப்பெயர்மாற்றம் உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---